DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF PROCEDURE)

IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | | | |
|---|---|---|---|
| Name | கருணாகரன் | Village | இருணாப்பட்டு மதுரா அண்ணா நகர். |
| Father's Name | குள்ளி | Taluk | வாணியம்பாடி |
| Age | 63 | Calling | கூலி வேலை |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of **12.03.2026**

**<u>EP.53/2020 in OS.14/1961</u>** **<u>எ.ம.சா.3</u>** **<u>11.50 AM – 11.58 AM</u>**

**<u>முதல் விசாரணை –</u>**

இவ்வழக்கில் நான் 3ம் நபர் ஆவேன். எதிர்மனுதாரர்கள் தரப்பில் 3–வது சாட்சியாக எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். படிக்க கேட்டேன் நான் சொன்னபடி இருந்தது. அதன் பின்னர் அதில் கையொப்பம் இட்டேன்.

**<u>குறுக்கு விசாரணை–</u>**

1. நான் எதிர்மனுதாரர்கள் வகையறாவுக்கு என்ன உறவு முறை என்றால் நான் அவர்கள் நிலத்தில் வேலை செய்கிறேன். எதிர் மனுதாரர்கள் குடும்ப பிரச்சனையோ அதில் நிலத்தின் பிரச்சனையோ குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு சம்பந்தப்பட்ட பிரச்சனை குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். துரைசாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் மொத்தம் எத்தனை உள்ளது என எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2. எனக்கு பாத்தியப்பட்ட சொத்து எதுவும் அந்த கிராமத்தில் இல்லை என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் யாரால் கூறி தட்டச்சு செய்யப்பட்டது என எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சி அளிக்க அழைப்பாணையும் வரவில்லை என்றால் சரிதான். யார் என்னை சாட்சியம் அளிக்க

நீதிமன்றத்திற்கு அழைத்தார்கள் என்றால் வக்கீல் அழைத்ததின் பேரில் வந்துள்ளேன். வக்கீல் கூறியதன் பேரில் தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் துரைசாமி வகையறா கூறியதன் பேரில் சாட்சியம் அளிக்கவில்லை என்றாலும் சரிதான். இந்த மனுப்பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

ESHWAR VISWANATHAN

DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
Location: VANIYAMBADI

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாணியம்பாடி.